**Pamphlet (Tamil)**

# ம.சே.நி: சிங்கப்பூரர்களின் வருங்காலத்தை உறுதி செய்தல்

இஆர்சியின் பரிந்துரைகள்




■ ம.சே.நி முறை, அடிப்படையில் நன்றாகவே உள்ளது. ஓய்வுகாலம், சுகாதாரப் பராமரிப்பு, வீட்டுடைமை ஆகிய மூன்று முக்கியத் தேவைகளுக்கு நாம் சேமிக்க அது நமக்கு உதவியுள்ளது.

■ ஆனால் புதிய சூழலுக்குப் பொருத்தமாக இருக்க அது மேலும் செம்மைப்படுத்தப்பட வேண்டும்.

# குறைந்தபட்சத் தொகை




■ ஓய்வுகாலத்தில் ஓர் அளவு வருவாய் பெறக் கூடிய வகையில் மேலும் அதிக ம.சே.நி உறுப்பினர்கள் 55 வயதில், குறைந்தது குறைந்தபட்சத் தொகையையாவது வைத்திருப்பதை உறுதி செய்ய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

## யோசனை

மொத்த ம.சே.நி விகிதம் 40 விழுக்காட்டுக்குத் திரும்பக் கொண்டுவரப்படும் போது, சிறப்புக் கணக்குச் சந்தாவை 1 விழுக்காட்டுப் புள்ளி உயர்த்துதல். குறைந்தபட்சத் தொகை காலப்போக்கில் படிப்படியாக $80,000-க்கு மேல் உயர்த்தப்பட வேண்டும்.

# வீடமைப்பு

(மானியம் பெற்ற வீவக அடைமானக் கடனில் வீவக வீடுகளை வாங்குவோர் தவிர)




■ ம.சே.நி உறுப்பினர்கள் பலர் தங்கள் ம.சே.நி சேமிப்பில் பெரும்பகுதியைச் சொத்து வாங்கப் பயன்படுத்தியிருப்பதால் ஓய்வு பெறும்போது "சொத்து அளவில் பணக்காரர்களாகவும் ரொக்க அளவில் ஏழைகளாகவும் உள்ளனர்."

■ உறுப்பினர்கள் தங்களுக்கு நன்கு கட்டுபடியாகக் கூடிய வீடுகளையே வாங்க வேண்டும். இதனால், அவர்களுடைய ஓய்வுகால வருவாய்க்குத் துணை புரிய அவர்களுடைய ம.சே.நி கணக்குகளில் அதிக ரொக்க இருப்பு இருக்கும்.

## யோசனை

வீட்டுக் கொள்முதலுக்கான ம.சே.நி பண மீட்புக்கு வீட்டின் மதிப்பில் 150 வரம்பு விதித்து, பின்னர் 5 ஆண்டுகளில் அதைப் படிப்படியாக 120 விழுக்காடாகக் குறைத்.தல்

# வேலைகளைத் தக்கவைத்துக் கொள்ளுதல்




■ மூப்படையும் ஊழியர்கள், கடும் போட்டி, பொருளியலில் நிச்சயமற்ற தன்மை அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக, பணி மூப்பு அடிப்படையிலான சம்பள முறையை மறுசீரமைக்க வேண்டிய தேவை அதிகரித்துள்ளது.

யோசனை

**50 - 55 வயதினருக்கு, முதலாளியின் ம.சே.நி சந்தா பங்கை 16 விழுக்காடாக வைத்திருப்பது காலப்போக்கில் ஊழியர்களின் சந்தாவையும் 16 விழுக்காடாக் குறைத்தல்**

■ 50-55 வயதுப் பிரிவினருக்கு முதலாளியின் ம.சே.நி சந்தாவை மாற்றமின்றி வைத்திருப்பது, வேலையில் நீடிக்கும் வாய்ப்பை அதிரிக்கத் தேவையான பல்வேறு நடவடிக்கைகளில் ஒன்று மட்டுமே. மாறுபடும் சம்பள விகிதங்களும் திறன்கள் பயிற்சியும் நமக்கு மேலும் அதிகம் தேவைப்படும்.

